முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : **1449**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**17.09.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான குருவே அரங்கா வாழ்க
ஞானிகள் பலம் கொண்ட தேசிகா வாழ்க
தானதர்மத்தின் மகா சக்தியே வாழ்க
தர்மமாகவே அவதாரம் எடுத்த அரங்கனே வாழ்க வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 31 ம் நாள், 17.09.2023, ஞாயிற்றுக்கிழமை)
ஊழ்போக்கும் கலியின் சிறந்த ஞானி
உண்மை வழி காட்டும் மாதவசி நீ
3. தவசி உன் தர்மத்தை பின்பற்றி
தக்கபடி சன்மார்க்கம் எற்று வந்தால்
அவசியம் உலகில் எல்லோர்க்கும்
ஆபத்தில்லாத பாதுகாப்பான வாழ்வாக
4. ஆகவே மாறி அற்புதங்கள்
அரங்கன் சக்தியால் நிகழக்கூடும்
வரமாகத் தருகின்ற அரங்கன் பிரணவக்குடிலை
வணங்கிவிட்டால் போதும் உலகோர்க்கு பாதுகாப்பு
5. பாதுகாப்புக் கூடி இனிதே பயபக்தி இல்லாத
மாந்தர்களும் கூட பணிவுபரிவு சர்வ பலமும் கூடி
கூடியே அவர்களெல்லாம் குருவால் ஞானிகளாகின்ற வண்ணம்
குறையில்லா தேறி வருங்காலத்தில்
6. ஞானவான் அரங்கன் தேடுகின்ற
நல்லாட்சிக்கு துணையுரியும் சக்தியாக மாறநேரும்
ஆகவே அரங்கன் வழித்தேடி அனைவரும் ஓங்காரக்குடில் நோக்கி வந்து
மகான் அரங்கன் திருவடி பற்றி மகாமந்திர தீட்சை ஏற்று வழிநடக்க

7. நடப்பவர்க்கு நன்மை உண்டாகும்
நடப்பவர்க்கு இவை பிறவிக்காலமே
இடரின்றி இனிப்பிறவி என்பது ஏதுமின்றி
ஏதுவாய் பேரானந்தகதி கிட்ட நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–